# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



## ஐசுவரியவான், ஏழை மனிதன்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: M. Maillot; Lazarus

தழுவியவர்: M. Maillot; Sarah S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

அநேக மத தலைவர்கள் தேவனில் அன்புகூறுவதைவிட பணத்தை அதிகமாக விரும்பினார்கள் என்று இயேசுவுக்கு தெரிந்திருந்தது.



தேவனில்லாமல் பணத்தை அதிகமாய் வைத்திருப்பது எவ்வளவு வீணானது என்று விளக்குவதற்க்காக இரண்டு மனிதர்களுக்கு என்ன நடந்தது என்று சொன்னார். பணத்தினால் தேவனோடு வாழும் பரலோக வாழ்க்கையை வாங்க முடியாது.



விலைமதிப்பற்ற அழகான
உடைகளைக் கொண்ட
பணக்கார மனிதன்
ஒருவன் இருந்தான்.
அவன் ராஜா போல்
உடை உடுத்தி
அலங்காரம்
பண்ணினான்.



அந்த பணக்காரன் நன்றாக சாப்பிட்டான்.  அவன் சாப்பிட்ட ஒவ்வொரு உணவும் ஒரு பெரிய விருந்து போல் இருந்தன. அவனிடத்தில் அதிக அளவு பணம் இருந்ததினாலே அவனால் தன்னுடைய காலை உணவுக்கோ, மதியான வேளைக்கோ, இரவு உணவுக்கோ, உணவு இடைவேளையில் சாப்பிட வேண்டிய சிற்றுண்டிக்கோ என்ன வேண்டுமானாலும் வாங்க முடியும்.



அந்த பணக்காரனின் வீட்டு வாசலில் வறுமையில் வாடி, நோயுடன் ஒரு பிச்சைக்காரன் இருந்தான். அவனுடைய பெயர் லாசரு.





வறுமையான லாசருவின் உடல்
முழுவதும் புண்கள் காணப்பட்டன.
அவனுக்கு ஒருவேளை வியாதிகள்
இருந்திருக்கலாம். மற்றவர்கள் அவனை
துன்புறுத்தியதினாலே அவனுடைய
உடலிலே கட்டுகளும், காயங்களும்
காணப்பட்டிருக்கலாம். அவன் நல்ல
உணவு வகைகளான பால்,
காய்கறி, மாம்சம்
சாப்பிடாததினாலே
புண்கள்
ஏற்பட்டிருக்கலாம்.



லாசரு
உணவுக்காக
ஏங்கினான். அந்தப்
பணக்காரனுடைய
மேசையிலிருந்து
விழும் துணிக்கைகள்
கூட சந்தோஷம்
கொடுத்திருக்கலாம்.

தெரு நாய்கள் சில
வேளைகளிலே
அந்த
உதவியற்ற
பிச்சைக்காரனை
மெத்தைப்போல்
உபயோகப்படுத்தின.
அவனைச் சுற்றி
வந்து அவனுடைய
புண்களை நக்கின. லாசரு
பசியாயிருப்பதை யாரும்
கண்டு கொள்ளவில்லை
என்று தெரிகிறது.



ஒரு காலை
பொழுதில், லாசரு
எழுந்திருக்கவில்லை.
பசியுடன்
உதவியற்ற,
நண்பர்களில்லாத
அந்தப்
பிச்சைக்காரன்
இந்த வாழ்க்கையை
விட்டு சென்று
விட்டான்.
லாசரு
மரித்துப்
போனான்.



அவன் மரித்தவுடன் லாசருவின்
வாழ்க்கையில் சந்தோஷம் ஆரம்பமானது.
ஆபிரகாமுடன் இருப்பதற்காக தேவதூதர்கள்
லாசருவை தூக்கிச் சென்றார்கள் என்று இயேசு
கூறினார். லாசரு தேவனால் ஆறுதல்
படுத்தப்பட்டான்.



அந்தப் பணக்காரனும் மரித்தான். அவனுடைய பணமெல்லாம் அவனுடைய வாழ்க்கையை காப்பாற்ற முடியவில்லை. மரணம் வந்தபோது, யாராலும் நிறுத்த முடியவில்லை.



அந்தப் பணக்காரன் அடக்கம் பண்ணப்பட்டான். ஒருவேளை அது ஒரு பெரிய அடக்க ஆராதனையாக இருந்திருக்கலாம். அவன் ஞானமுள்ளவனென்றும், வெற்றியுள்ளவனென்றும் பணக்காரனை ஜனங்கள் ஒருவேளை புகழ்ந்திருக்கலாம்.



ஆனால் அவர்களுடைய புகழ்ச்சியோ அவனுக்கு உதவி செய்யவில்லை. அந்தப் பணக்காரன் நரகத்திலே காணப்பட்டான்.



நரகத்திலே, அந்தப் பணக்காரன் அழுதான்,
"தகப்பனாகிய ஆபிரகாமே, லாசருவை அனுப்பி அவனுடைய நுனி விரலினாலே தண்ணீரை தொட்டு என்னுடைய நாவை குளிரச் செய்யட்டும் - இங்கே நெருப்பிலே நான் சித்திரவதைப்படுகிறேன்."



"வாழ்க்கையிலே
உனக்கு எல்லாமிருந்தது
ஆனால் லாசருவுக்கோ
ஒன்றுமில்லாதிருந்தது,"
என்று ஆபிரகாம் பணக்காரனை
ஞாபகப்படுத்தினான்.
"இப்போதோ லாசரு ஆறுதல்
படுத்தப்படுகிறான் ஆனால்
நீயோ சித்திரவதைப்படுகிறாய்.
இங்கிருந்து அங்கே யாரும் வராதபடி
நம்மிருவருக்கும் இடையில் ஒரு
பெரிய இடைவெளி
உள்ளது."







"லாசருவை அனுப்பி என்னுடைய ஐந்து சகோதரர்களை எச்சரியுங்கள்," என்று ஐசுவரியவான் வேண்டிக்கொண்டான். "அவர்களும் இந்த சித்திரவதைப்படும் இடத்திற்கு வர நான் விரும்பவில்லை," என்றான்.

"உன்னுடைய சகோதரர்களுக்கு தேவனுடைய வார்த்தை இருக்கிறது," என்று ஆபிரகாம் பதிலளித்தான். அந்த ஐந்து சகோதரர்களும் வேதத்தை விசுவாசிக்கவில்லையானால், லாசரு மரணத்திலிருந்து திரும்பிப் போனாலும் நம்பமாட்டார்கள்.



இயேசு, பணக்காரன் மற்றும் லாசரு கதையை சொல்லி முடித்தபின், மதத்தலைவர்கள் ஒருவேளை தங்களைத் தாங்களே கேட்டிருக்கலாம், "நான் 'தேவனை' விட பணத்தை அதிகமாக நேசிக்கிறேனா?" தேவனுடைய வசனத்திற்கு செவி கொடுக்காவிட்டால் என்ன நடக்கும் என்று இப்போது அவர்களுக்குத் தெரியும்.



ஐசுவரியவான், ஏழை மனிதன்

தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

லூக்கா 16

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16